உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.
வெற்றிவேலுற்றதுணை.

அறுமுகக்கடவுள்

அகராதிமாலை.

காரையார்கோவில்
வேதாந்திமடாலயம்
ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பலசிவம் அவர்கள்
இயற்றியது.

பலவான்குடி
"சிவநேசன்" அச்சியந்திரசாலை,
விபவ ஆண்டு-தைத்திங்கள்.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரங்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்க மாணவர் சித. ஸ்ரீ நாராயணசுவாமிகள் இயற்றியது.

கட்டளைக்கலித்துறை.

மகராதி யைத்தொடுங் காணவே தாந்த மடாலயத்தார்
செகராச ராசர் கவிராசர் மெச்சிடத் தேர்ந்துகவி
பகராதி நற்றவப் பொன்னம் பலசிவ பாவலனோர்
அகராதி மாலை யறுமுக னருக் கணிந்தனனே.

திருக்குறட்கும்ரோச வேண்பா ஆசிரியர்
உயர்திரு ஜெகவீரபாண்டியக் கவிராஜபண்டிதரவர்கள்
இயற்றியது.

பாட்டுவந்து பரிசளிக்கும் பதிகுன்றக்
குடியமர்ந்த பரனே யென்று
கேட்டுவந்து மனமுருகிக் கேழாரும் மாலையொன்று
கிளர்ந்து சூட்டி
மீட்டுவந்து பிறந்திறந்து மெலியாத பெருவாழ்வை
மேவ நின்றான்
கூட்டுவந்த புகழ்மலிந்துகுலவுபொன்னம் பலசிவமாங்
குணமிக் கோனே.

சௌரியமங்கலம் புராணிகர் சிதம்பரவேலுப்பிள்ளையவர்கள்
புத்திரர் கர்ணம் உயர்திரு முத்துக்குமாரசாமிபிள்ளையவர்கள்
இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சிந்தா ருலகு புகழ்ந்திடவே
தெருட்டும் ஞான தீபமெனப்
பைந்தோ கையிலா ரறுமுகனர்
பதத்துக் கணித்தேன் மொழிமலரால்
நந்தா தோங்கு மகராதி
மாலை வணைந்து நனிசிறந்தான்
மைந்தார் ஞான பானுவென
வயங்கும் பொன்னம் பலசிவனே.

கண்டமாணிக்கம் திருவாளர் மே. சா. சாத்தப்ப செட்டியாரவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சுகராதி முனிவர்தொழு மொருகுன்றக் குடிதிருச்செந் தூரில் [வாழங்
குகராதி யடியிணைகட் கணிமதுரத் தேனொழுகக் குவ்வோர் [போற்றிப்
பகராதி தவப்பொன்னம் பலசிவநா வலரருளாற் பாடித் தந்த
அகராதி மாலையினைத் தினமோதித் திருவருளை யடைந்து வாழ்வாம்.

குன்றக்குடி காசிச்சாமி மடம்
ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கொம்பாடி தனிற்பிறந்து குலசைநகர் தனில்வளர்ந்து குவ்வோர் போற்று
மொய்ம்பாகுந் திருக்கானப் பேர்தனினற் கலைதேர்ந்து சிறந்து மூத்த
இன்பாகும் வளப்பலவான் குடியதனில் வீற்றிருந்தே யெழிற்செவ் வேடாட்
கன்பாரு மகராதி மாலைபொன்னம் பலசிவமோர்ந் தணிந்தா னம்மா.

சென்னை வியாசர்பாடி க. சிவ. மடம் சு. அ. இராமசுவாமிகள் இயற்றியன.

காவாருங் குன்றைநகர் தனில்வாழுங் கானமயிற் கடவு ளேசின்
பூவாரும் புயமீது மாலையொன்று பொற்போங்கமொழிப்பூக் கொண்டு
சாவாரு மினியென்றுஞ் சாவாத பெருவாழ்வைச் சாரு மாறு
நாவார வனைந்தனனற் புகழ்பொன்னம் பலசிவமா நாவலோனே. 1

சீராருங் குகனருளாற் சிவஞான பானுவெனத் திகழு மெங்கள்
ஏராரு முயர்பொன்னம் பலசிவனார் வனைந்தளித்த எழிற்றேன் சொட்டும்
நாராரு மகராதி மாலையினைத் தினம்படித்து நாடி யேநாம் 2
தீராத பெரும்பிறவிக் கடனீந்திச் சிவகதியைச்
சேர வேவீ...

ஓம்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
வெற்றிவேலுற்றதுணை

அறுமுகக்கடவுள் அகராதி மாலை.

குன்றக்குடித் தோகையடிவிநாயகர் துதி.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

முடிவிலா ஞதி நடுவிலான் மொழியான்
மொழியொணுன் முன்னெணுன் மனத்தான்
வடிவிலா னுய வொருபர ஞனுன்
மாநில முய்புவா னென்றும்
மடிவிலா வாறு முகவனு யமரும்
மயின்மலைக் கடியில்வாழ் தோகை
யடிவிநா யகரி னடியைநாம் பரவி
யடியரா யடியடைந் திடுவாம்.

நூல்.

குன்றக்குடி

கட்டளைக் கலித்துறை.

அந்தா ரணிபுகழ் குன்றக் குடியில்வே ளாறுமுகம்
நந்தாச் சிரிப்புடன் கைகாட்டிப் பாதம் நனிவிளங்கப்
பைந்தோகை மேல்வீற் றிருக்கின்ற காட்சியென் பாதமலர்
இந்தா பிடியெனச் சொல்வது போல இருக்கின்றதே. 1.

அகவிரு ளோடு புறவிரு டன்னை யகற்றுவது
செகதல மீதுநம் வேதா கமத்துந் தெரிந்திலமே
மகபதி போற்றிடுங் குன்றக் குடிக்குகன் வண்கையினிற்
றகதக வென்னத் திகழ்வேற் படையினைத் தான்றவிர்த்தே. 2.

ஆறு முகங்கண்டு பன்னிரு தோள்கள்கண் டங்கையினி
லேறிய வேல்கண்டு நந்தாயர் பக்கத் திலங்கல்கண்டு
வீறு மயில்கண் டதன்மேற்செம் பாதம் விளங்கல்கண்டு
கூறில் பதங்கண் டிடவாருங் குன்றக் குடியினுக்கே. 3.

இல்லறந் தன்னி லிருந்தாலென் னில்ல மிகந்துசெய்யும்
நல்லறந் தன்னி லிருந்தாலென் னெல்லா நலந்தருமே
சொல்லற மெய்யனங் குன்றக் குடிக்குக சுந்தரன்றன்
மெல்லிய பாதாம் புயத்தினைப் பற்றி விடாதவரே. 4.

ஈயாத புல்லரைப் பாடி யிடர்ப்படா தின்பனீர்கண்
ணேயா ரரும்பா நகைமுகம் பூவதா வின்சொலதா
காயா அருட்பதந் தீங்கனி யாத்தருங் கந்தனென்னும்
ஓயாத குன்றக் குடிக்கற் பகத்தினை யோதமினே. 5.

உலகத் தவர்புகழ் குன்றக் குடிமலை யுச்சியிலே
கலசப் பிறவிப் பிணிக்கோர் மருந்தினைக் கண்டுகொண்டேன்
நலமுற்ற வாறு முகத்தொடீ ராறு நயனத்தொடு
பலமுற்ற தோகை மயின்மேல் விளங்கிப் படர்கின்றதே. 6.

ஊரோ துணையன் றுறவோ துணையன் றுடன்பிறந்த
பேரோ துணையன்று பெண்டிர் துணையன்று பேருலகில்
ஆரோ துணையெனிற் குன்றக் குடிவள ராறுமுகச்
சீரோன் கழலே சதாதுணை யென்றுநீ சிந்திநெஞ்சே. 7.

என்னை யுலகத்தி லின்பமுண் டென்றென வேயுமன்று
பொன்னே யனையநங் காலத்தை வீணுக்கிப் போட்டனமே
தன்னேரி லாதநங் குன்றக் குடிக்குகன் றன்வடிவே
மன்னேயு முண்மை யறிவின்ப மென்ன மதிநெஞ்சமே. 8

எமவே தாந்தமு மின்பச்சித் தாந்தமு மேமுறையே
நேம வுபாய நெறியென்று முண்மை நெறியென்றுநீ
சேம முறவெற் குணர்த்தி மயக்கத்தைத் தீர்த்தனையே
ஓமெனுங் குன்றக் குடியோங்கு வேற்சாத் தத்தமனே. 9.

ஐயுண்ட வேற்கரக் குன்றக் குடிக்குக னஞ்சிலம்பின்
மையுண்ட கண்ணிவள் கொங்கைக்குத் தோற்ற வரைக்கு
கையுண்ட சிற்றுளி யாற்றகர்ப் புண்டு கனவுரலாய் [லங்கள்
நொய்யுண்ட அம்மி குழவி திரிகையாய் நூறுண்டவே. 10

ஒருஞான பண்டி தகலி யுகவர தோத்தமனே
திருஞான சம்பந்த னுய்வந்த சைவநற் றேசிகனே
மருவார் மரம்பயில் குன்றக் குடிமயில் வாகனனே
கருவார் பிறவிக் கடலில்வீ ழாதெனைக் காத்தருளே. 11.

ஓமே யெனச்சொல்லு வோமே மயிலை யொளிகொள்சத்தி
தாமே யயிலென்ப தாமே முருகனைச் சங்கரனென்
போமே யெனினிடர் போமேகுன் றக்குடிப் பொன்மலைசெல்
வேமே முமலமும் வேமே யுடனுண்டு மேன்மைகளே. 12.

ஔவை யிடந்தமிழ்ப் பாமாலை கேட்க அவாக்கொண்டலோ
நவ்வல் மரத்தன் றிடைச்சிறு னாகி நயந்துநின்று
யிவ்வுல கத்தௌவை யின்றிலை யென்செய்வ யேகுன்றையாய்
எவ்வமி லுன்னரு ளென்பால்வைத் தின்பா விசைப்பிப்பையே. 13.

அஃகாத செல்வமீ குன்றக் குடிஞான வாதித்தனே
எஃகா யுதங்கொண்ட சண்முக சந்திர னேயெனக்கு
லஃகா னொடுநற் றகரம் புணர்ந்தா லனவிடயம்
வெஃகாக நின்னொடு நானர்சுத் தாத்து விதந்தந்தையே. 14.

கண்டோ மொழிவிழி வண்டோ மதித்துக் கனிக்குமிடை
யுண்டோ தனங்குன் றிரண்டோ வெனத்திக ழொண்டொடியார்
திண்டோணலம்வெறுத் தெண்டோளனீன் றநஞ்செவ்வேளெனும்
பண்டோ னருள்வளர் குன்றக் குடியனைப் பார்மனமே. 15.

நப்போல் வளையெனும் ஞாயத்தை யோர்ந்தநீ ஞாலத்தினன்
கொப்போ டுறுத கொடிபோ லலைந்து குலைதல்கண்டும்
அப்பா சிறியைநீ யஞ்சே லெனுதிருத் தல்லழகோ
ஒப்பே யிலாவருட் குன்றக் குடிவள ரோருறவே. 16.

சர்க்கரைப் பந்தலிற் றேன்மாரி பெய்தெனச் சார்கவியுந்
தொக்கநற் பண்டித பாமர ரஞ்சித சொற்பொழிவும்
மிக்கநற் சொற்பொழி வேபோ னடையுமோர் மெய்யுணர்வும்
இக்கணத் தெற்கருள் குன்றக் குடிவள ரென்குருவே. 17.

ஞண்டுச்சூ லொத்திடு மொண்டொடி யார்க ணசையென்னவே
கண்டித் துரைத்திடு மேலோர்கள் சொல்லைக் கருதலின்றிக்
கொண்டற் குழலியர் மேற்போய் விழுமென் கொடுமனத்தை
யண்டித் தடுத்தடக் கையாகுன் றக்குடி யாண்டகையே. 18.

இடங்கா முதலிய பல்லியம் டம்டம் மெனமுழங்கத்
தடங்கார்க் கடலெனச் சேனைகள் சூழ்ந்திடச் சம்ப்ரமத்தோ
டடங்காச் சினத்துடன் வந்தெதிர் சூரை யடங்கவென்ற
மடங்கா வயில்கொண்ட குன்றக் குடியாளு மன்னவனே. 19.

இணங்கத் தகாச்சட மும்மலத் தோடே யிணங்கி யதாய்க்
குணங்கெட்ட துட்டனுக் குன்னைப்பி லாவெண் குணசகித
மணந்தத்து மின்புருக் காட்டியவ் வண்ணமே யாக்கியருள்
அணங்கொத்த நங்கைய ராடுங்குன் றக்குடி யாண்டவனே. 20.

தண்டா மரைமலர் மேலுறை வான்சங்கு தாங்குமரி
யண்டா திபருய்ய வன்றால முண்டவ னதியர்கள்
கொண்டாடுங் கோவினைக் குன்றக் குடிவளர் கோமளத்தைக்
கண்டா லலதின்ப முண்டாவ தின்றென்பர் கற்றவரே. 21.

தட்டானை வாக்கு மனத்திற் றகுஞ்சூர்க்கொல் வேலையனைக்
கொட்டார்க் குறத்தியைத் தெய்வானை யாமங் குசத்தியைச்சேர்
கட்டான பாசாங் குசவன்றன் றப்பியாங் காவேடனை
முட்டாத காக்கள்வாய் குன்றக் குடியனை முன்னுதுமே. 22.

கல்லார்கள் நட்பை நயந்துண்மை ஞானியர் நன்குமதி
கொல்லாவிரதத்தைமேற்கொண்டென் றென்றுங்கொடுப்பவரா
சொல்லார் திருப்புகழ் பாடித் தொழுதிடுந் துங்கவன்பர்க் [ய்ச்
செல்லாந் தருவன்குன் றக்குடி மேற்கொளு மெண்குணனே. 23.

பதுமா சனத்தனும் பாற்கடற் றாக்கனும் பார்க்கரிய
இதமார் சிவனுக்கும் இன்ஞான தேசிக னென்னநின்னைப்
பதமா வறிந்தவர் மற்றோர்தெய் வத்தைப் பரமென்பரோ
நிதமாடல் பாடல்கள் நீங்காக்குன் றக்குடி நின்மலனே. 24.

மயில்வா கனத்தனை மன்னுயிர்க் கத்தனை மாசில்தவம்
பயில்வா ரகத்தனைப் பண்புடைக் கத்தனைப் பற்றுநிட்டைத்
துயில்வார் சுகத்தனைத் தூமா முகத்தனைச் சூரைவென்ற
அயில்வார் கரத்தனைக் குன்றக் குடியனை யண்டுநெஞ்சே. 25.

யகர நிலையே யறியா துழன்றிடும் யானெப்படி
வகர நிலையை யறிந்தது காட்டிடும் வண்மைமிகுஞ்
சிகர நிலையைத் தெரிந்தது வாகிச் சிறந்திடுவேன்
குகவது யான்பெற நீயேசெய் குன்றக் குடிவள்ளலே. 26.

இரவிமுன் னேயிரு ணின்று விரவிக் கிழுக்கலவோ
தரமிகு மின்பச் சிவஞான பானுநின் சந்நிதியில்
உரமிக வந்துற்ற என்பா லுளத்திரு ளுள்ளதெனிற்
பெரியவ ரென்சொலார் பேசுகுன் றக்குடிப் பேர்க்குகனே. 27.

இலக்கு மணனுக்கு முன்னேனின் பேர்கொண்ட எற்றத்தினுற்
றலக்கணற் ருரக அர்த்தமென் ருஞ்சொல் தகுதிபெற்ற
நலத்தை யுணர்ந்துன்ற னமஞ்சொல் லெற்குநீ நல்கிலேயேற்
பலத்தநின் வெற்றிக் கடாதுகுன் ருக்குடிப் பண்ணவனே 28

வடைபணி யாரமுன் வைத்தேத்து வார்கள் மனமகிலா
வடைபணி யாரந் தனவல்ல பேசன் மகிழ்தம்பிதே
வடைபணி யார மடியான்குன் ருக்குடி வள்ளனந்தெவ்
வடைபணி யாரஞ் சடையான் மகன்றனை வாழ்த்துதுமே 29

அழகா வுனக்கு மழகா வெறுத்த லடியன்முன்பின்
பழகா தவனு பழகா தவரெனப் பார்த்துவிடேல்
குழகா வுனக்கெங் குளகா ததுகேட் குதலிலேயோ
மழகா மனவன் மருகாகுன் ருக்குடி வானவனே 30

இளமையிற் கல்லென்ற வண்ணந் தொடங்கி யிறுதிவரை
பளகறக் கற்பினுங் கற்ற தணுவும் படித்திலது
அளவெனச் சொல்வர்குன் ருக்குடிக் கந்த னருள்சிறிதே
யுளதெனிற் றேன்றிடும் ஞானங்கள் யாவு மொருநொடியே 31

அறவினை யாதெனிற் கொல்லாமை கோற லவனியிலே
பிறவினை யெல்லாந் தருமென் றுரைத்த பெருநாவலர்
திறவுரை தன்னைத் தெரியாம லூனுண்ஞ் சிற்றினத்தைப்
புறமென நீக்கி யெனையாள்குன் ருககுடிப் புண்ணியனே 32

அனந்தற் சுவையை யயிற்சுவை யைப்பெண் ணணைசுவையை
மனம்பற் றிடாமற் பரஞான வின்ப வடிவனினைத்
தினம்பற்றி யான்சிவ போகந் திளைத்துச் சிறக்கவருள்
கனம்பெற்ற குன்றக் குடியோங்கு பன்னிரு கண்மணியே 33

திருச்சேந்தூர்.

கற்றவர்க் குற்றநட் பொத்துடற் பற்றினைக் கைத்துவிட்ட
நற்றவர்க் குட்டுணைப் பொற்பதத் தைத்தெரித் தட்டிநட்ட
பற்றவர்க் கெட்டலற் றட்டசித் தர்க்குமெய்ப் பத்தர்கட்கு
வெற்றிவைப் பொத்தவர் தத்தலைக் கட்பதி வேற்கந்தரே 34

கந்தனைக் கைக்கொண்ட கந்தனைக் கொண்டுதக் கன்செயம்ம
கந்தனைச் சேதித்தி கந்தனைக் காவை கனிவினருள்
கந்தனைச் செந்திலு கந்தனைக் கொப்பவன் கான்மன்னின
கந்தனைப் போக்கிய கந்தனைத் தந்திடுங் காணெஞ்சமே. 35.

காங்கேய னென்றுனைக் காண்கே னெனவிரு கண்டுஞ்சுதில்
பாங்கேயி லெற்கிதல் பாங்கே யருட்குப் பவம்வந்திடா
தோங்கேள்வி யாலய னேங்கேய் முடியினி லோங்கிக்குட்டுஞ்
சாங்கேடில் செந்திலிற் பூங்கோயில் கொண்டருள் சண்முகனே.

காமாந் தக னருள் செந்தூர்க் கருணா கரக்கந்தநின்
பாமாந் தழைக்கொரு விண்ணப்ப முண்டென் பயின்மனத்திற்
பூமாந் தளிசூழ் குழலிய ராசை புகாம லருள்
ஏமாந் தொருகாற் புகின்வே லெனவல்லை யேகணுமே. 37.

கிண்கிணிச் செம்பதத் தின்பதைத் தந்தருள் கீர்த்திமிக்க
எண்குணக் கந்தனைச் செந்தினற் சொந்தனை யேத்துநெஞ்சே
கண்களிற் றிங்களிற் குங்குமக் கொங்கையிற் கண்டுமொழிப்
பண்களிற் செங்களச் சங்கினிற் கட்டுப் படாதுறவே. 38.

கிருகிருப் பைத்தவிர் மூவாசை யென்னுங் கிளர்கிட்டையிற்
பெருவிருப் பைத்தரு நின்புக ழேதினம் பேசுவதிற்
பொருவினற் றொண்ட ருடன்கூடி வாழ்வதிற் பொங்கியெழுஞ்
சுருசுருப் பைக்கொடு செந்தில்வாழ் சண்முக சுந்தரனே. 39.

கீற்றுப் பிறையவர் கீழ்தப் பிறையவர் கேடொன்றிலாச்
சோற்றுத் துறையவர் நுண்ணூற் றுறையவர்தொண்டரைச்சார்
கூற்றுச் சிதைப்பவர் கோளே சிதைப்பவர் கூர்ந்தளித்துப்
போற்றிருப்பி லாச்செந்தில் வாழ்கந்த சாமியைப் போற்றுதுமே

குணமார் கடலினைக் குன்று மலையினைக் கொண்டுண்டிடத்
தணவாத அம்பினை மானிக்கு வில்லினைத் தாரணியில்
மணமார்ந்த சட்டியிற் கொக்கை யவித்திட்ட வல்வேடனை
யெணுவார் பவந்தெறுஞ் செந்திற் குகேசனை யேத்துநெஞ்சே.

கூசாம லேகவோர் செங்கோல்கைக் கொண்டு குலுங்குகலை
மீசால வெள்ளை முடியே துலங்க மிரண்டுயிர்போய்
நாசாய்ந்து நாலாள் தனக்குமே லாளாய் நடப்பதன்முன்
ஈசா திருச்செந்தில் வாசா வெனத்தொழு தேத்துமினே. 42.

கொடியார மோடு வதுபோல வாணாள் கிடுகிடெனத்
தடையேது மில்லாம லோடி யுடலது சாயுமுன்பே
அடியாரை மேவி யவரடி பேணி யவர்கட்டளைப்
படியிற் செந்திற் குமரேசன் பாதம் பணிந்துய்மினே. 43.

கேட்கின்ற தெவ்வா மானுலுந் தந்துமெய்க் கீர்த்திகொள்ளும்
வேட்சந்த பாதர்செந் தூர்க்கந்த நாதரை வேண்டிநில்லீர்
பாட்டின்ப தேதெரி யாப்பொன்று லோபரைப் பாடிநின்று
வாட்டந் தவிர்ந்திலி ரேனே மதிக்கவி வாணர்களே. 44.

கேளாத கேள்வியைக் காணாத காட்சியைக் கேடொன்றிடாத்
தோளாத முத்தினைத் தூண்டாத சோதியைத் தொண்டர்கட்கு
மாளா வமுதினை வண்டார்க்கு நஞ்சினை மாசினம்மை
யாளா வுடையனைச் செந்தூர்க் குகேசனை யார்மனமே. 45.

கையா றிரண்டுளன் கண்ணு றிரண்டுளன் காதுமற்றே
மெய்யாறு வாயுள னேன்செந்தி லாதிபன் விள்ளுமெனின்
நையாத அன்பர்க் கிரண்டொன்று போதா நலஞ்செயற்கென்
றையான பேரரு ளாற்கொண்டு ளானென் றறைகுவனே. 46.

கொம்பாடி லங்கும் புறமே லமருங் குமரர்குறக்
கொம்பாடி ரத்த ரடியேனைச் செல்வங் குலவுபுகழ்க்
கொம்பாடி யிற்றோன்று வித்தருள் செய்த குழகரொற்றைக்
கொம்பாடி ருக்கார் தம்பியர் தம்பதி கோச்செந்திலே. 47.

கோவுக் கருங்கலங் கோலெனக் கோடாமை கொண்டநற்கற்
றூவுக் கருங்கல மண்ணற்கஞ் சீத லமுதமொத்த
பாவுக் கருங்கல மெய்ப்பயன் காட்டுதல் பத்தாது
நாவுக் கருங்கலஞ் செந்தூர்க் குகன்றிரு நாமங்களே. 48.

கௌவு மலமென்னு நாகபா சத்தினுற் கட்டுண்டயர்
இவ்வெளி யேனுய்ய ஞானசஞ் சீவியெனமஞ்ஞைமேற்
பௌவமா ரிவ்வுல கத்தின்று வந்தின்பு பாலித்தருள்
தெவ்வடு வேல்கொண்ட செந்தூரில் வாழ்ஞான தேசிகனே. 49.

இக்கட்டி னின்றே யிடர்க்கட்டி னீங்கி யிணையிலின்பாம்
அக்கட்டின் வாழ அகக்கட் டிகழுமோ ராசையுண்டேற்
கொக்கட்டிக் கோழிக் கொடிக்கட்டி வாழுங் குபீரென்றலை
பக்கத்திற் றத்துமோர் கொற்றச்செந் தூரனைப் பாடுமினே. 50.

அறுமுகக்கடவுள் அகராதிமாலை

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

சிவமயம்.

தனிப்பாடல்கள்.

பலவான்குடி முதலியவற்றைக் குறித்துப் பாடியது.

கட்டளைக் கலித்துறை.

திருவாவி யொக்கும் வளப்பல வான்குடி
சீர்கொள் தடந்
தருபூவை யொக்குமவ் வூர்சேர் திருவா
சகமடம்பூ
விரிதேனை யொக்கும் மடம்வாழ் குமார
விநாயகன்றன்
உருவாரத் தேனுண்வண் டொக்குஞ் சிவநேச
ரொண்சங்கமே.

பழநித் தண்டபாணி துதி.

நடுவெழுத்தலங்காரம்.

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒருவிதநோ யொருகருவி யுறுங்காமர் சுகமில்லா னக்க தேவி
யுலகீன்ற ளிவ்வறுசொன் னடுவெழுத்தா றெனக்கருள்வா யுடனும் [பன்னீர்
உருவெழுத்தைக் காத்தமைத்துஞ் சிரத்தமைத்துந் திருக்கழுத்தி லோங் [கச் சேர்த்து
மொளிரிழையர் கத்தரித்து மேற்போர்த்தும் பிறப்பிடமா வொருகாற் [கொண்டும்
பெருமையுடன் விளங்குமுக்கட் பெருஞ்சோதி பெற்றெடுத்த பெரிய [வாழ்வே
பேசருமைந் தருநிகர்த்து மாசில்வளம் பலகொடுத்துப் பிறங்கா நின்ற
தருநிறையும் பழநிவரை யுறைதண்ட பாணியே சகசானந்தத்
தடங்கடலே மடங்கலந்தா ரிடம்பொருந்தாக் கடம்பணிந்த தனிச் [செவ்வேளே

ஒருவிதநோய்	க	ப	ம்	கம்—தலை
ஒருகருவி	அ	ர	ம்	அம்—கங்கை
காமர்	கா	ம	ர்	கார்—கருமை
சுகமில்லான்	அ	சு	கி	அகி—பாம்பு
அக்கதேவி	தோ	க	ல்	தோல்—யானைத்தோல்
உலகீன்றாள்	அ	ம்	மை	அமை—மூங்கில்

மேற்காட்டியிருக்கும் ஆறு சொற்களின் நடுவெழுத்துக்களைக் கூட்டிப் படிக்கப் "பரம சுகம்" என்று வருதல் காண்க. எனவே பரம சுகம் எனக் கருள்வாய் என்று வேண்டிக் கொண்டவாறாயிற்று. அக்கதேவி—ஒருவகைப் புல்; அதற்குத் தோகல் என்றும்பெயர்.

நடேசர் துதி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கடத்தானை யுரியனைச்சங் கடத்தானை யாதடியார்
களை நன் கோம்புந்
திடத்தானைப் பனிவரைமா திடத்தானைத் திரைசெறிநீ
ருறைச டாம
குடத்தானை யொருதிருக்குக் குடத்தானை யனைக்கொடிய
வழியி லென்னை
நடத்தானை மணிமன்றி னடத்தானைக் கண்டுதொழு
துய்ந்தே ஞனே.

கண்ணிகள்.

1. முருகா என நினைபவர்மனதுறை முத்தைய னைப்பணிவாம்
அநுதினமும்—(முருகா என நினைபவர்மனதுறைமுத்)
முனிவா திய மயலற நயம்வர
முனிக்கணந் தினம்வந்து துதித்திடுந் திருச்செந்தில்—முரு
[கா என

2. பலதே வர்க ளரகரவெனுமொழி பலகடலெனவதிர (அரியொடு
பதுமா சனி பணிந்திடும் அழகுறு [யர்பல தேவர்கள்)
பலந்தரும் பிடியினை மணந்திடும் பரங்கிரி—முருகா எனநினை

3. மதவாதிகள் மதமொடு மிகல்புரி மட்டில் தருக்கமொழி--(பலபல
மனவாதனை யொருசிறி துந்தராமல் வாம் மதவாதிகள்)
மகிமைச் சிவவுணர்வை யருளிச் செயும்பழநி—முருகா என
[நினை

4. சிவஞ ருடன் அரியயன் அமரர்கள் தினசரியணுகியொரு--
சிவஞா னமதெய்திடவருள் குருபார்(மகிமை மிகு சிவ ஞருடன்)
சீரக மீதென வேபகர் ஏரக---முருகா என நினை

5. வடமால் வரையெனமிகவுயரிய கொடுமுடியொடு மிலகும்
மகிமா மிகுமுனிவரரொருதரு (அமரர்வதி வடமால்வரை)
மருத்தணி கருத்தணி யெனத்திகழ் திருத்தணி---முருகா என

6. உலகா னதுபலபல வகையினில் உளமகிழ் வொடு புகழும் (கடல்
ஒருமா தன வணிகரின் நகர்நடு புடைகொள் உலகானது)
வொன்றுகின்ற வென்றிக்கொடி நின்றிலங்கு குன்றக்குடி---
[முருகா என நினை

வெற்றிவேலுற்றதுணை.